**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**

**CHEYYUR**

**Calender :**

**Miscellaneous : STC Case No. 309/2022**

**Sessions :**

**Deposition of Witness for : PW 2, LW2**

| | |
|---|---|
| Name | : திரு.பாலகிருஷ்ணன் |
| Father's/Husband Name | : திரு.கோவிந்தராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 29th day of August, 2025**

( எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது சூணாம்பேட்டில் குடியிருந்து செடி உரக்கடை வைத்து நடத்தி வருகிறேன். சாட்சி சாவித்திரி எனது மனைவி ஆவார். சாட்சி மோகன்ராஜ் எனது மகன் ஆவார்.

2. கடந்த 30.04.2022 ம் தேதி நான் என்னுடைய இடமான பழைய சர்வே நெம்பர்.281/3, புதிய சர்வே நெம்பர் 954/5 ல் கடை கட்டிக்கொண்டு இருந்தேன். அந்த இடத்தில் கடை கட்டக்கூடாது என்று ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரியான தயாளன் ஆகியோர்கள் தகராறு செய்து என்னை அடித்துவிட்டார்கள். அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் சி.எஸ்.ஆர் பதிவு செய்தார்கள். அதன்பின் அதே இடத்தில் நான் இரண்டு கடைகள் கட்டி குடோனாக வைத்திருந்த இடத்தில் 1.5.2022 ம் தேதி ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரியான தயாளன்

ஆகியோர்கள் குடோனுக்கு வந்து கடையின் உள் லாக்கரை உடைத்து குடோனில் இருந்த சிமெண்ட் மூட்டை, கம்பிகள் மற்றும் உரத்தையும் எடுத்து வெளியே போட்டுவிட்டார்கள். எதிரிகள் மேற்சொன்ன செயலை கூலி ஆட்களை வைத்து செய்தார்கள். மேலும் நான் செல்பில் வைத்திருந்த ஆவண எண்.147/1996 பத்திரத்தை எடுத்து கொண்டு சென்றுவிட்டார்கள். அதன்பின் மேற்சொன்ன இடத்தில் எதிரிகள் வேலி அமைத்தார்கள். அது குறித்து நான் கேட்டதற்கு எதிரிகள் என்னை தேவிடியா பையா உன்னை ஒழித்தால் தான் நிம்மதி என்று சொல்லி அசிங்கமாக திட்டி மிரட்டினார்கள். மேலும் என்னை கொம்பாலும், காலாலும், கல்லாலும், எனது தலை, இடது கண் புருவம் அடித்தும் எட்டி உதைத்தார்கள். என்னை கீழே தள்ளிவிட்டார்கள். நான் மயங்கிவிட்டேன்.

3. அப்போது என் மகன் மோகன்ராஜ் சம்பவத்தை செல்போனில் படம் பிடித்தபோது ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரியான தயாளன் ஆகியோர்கள் செல்போனை உடைத்துவிட்டு அவரை அடித்துவிட்டார்கள். காயம்பட்ட நான் 108 ஆம்புலன்சு மூலம் செங்கல்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். இது குறித்து காவல் நிலையத்தில் என் மனைவி புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எனக்கு சொந்த ஊர் திண்டிவனம் தாலுக்கா, ஆவணிப்பூர் ஆகும். 30.04.2022ம் தேதி சுமார் 12.00 மணிக்கும், 01.05.2022 அன்று சுமார் 12.00 மணிக்கும் சண்டை நடந்தது. முதல் நாள் சண்டையில் ஆஜர் எதிரிகள் அனைவரும் இருந்தார்கள். அன்று சண்டை போட்டார்கள். அடிக்கவில்லை. சண்டை போட்டு வேலையை மட்டும் நிறுத்திவிட்டார்கள்.

போலிசார் விசாரணையில் முதல் நாள் வாய் சண்டை போட்டு வேலையை மட்டும் நிறுத்தினார்கள் என்று கூறினேனோ என்றால் கூறினேன். கீழே உரக்கடை மேலே நான் குடியிருக்கும் வீடு என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக உரக்கடை வைத்துள்ளேன் என்றால் 1990 முதல் வைத்துள்ளேன். அந்த இடத்தில் 2013 ல் இருந்து வைத்துள்ளேன்.

என்னுடைய வீடு உள்ள பகுதி குளம் புறம்போக்கு என்றால் சரிதான். அந்த இடத்திற்கு எனக்கு பட்டா வழங்கவில்லை என்றால் சரிதான். அந்த பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகிறோம். நான் கட்டியதாக கூறும் கடை என்னுடைய வீடு மற்றும் உரக்கடையில் அருகில் உள்ளது என்றால் சரிதான். சுமார் 300 அடி தூரத்தில் உள்ளது.

2 வது நாள் சண்டை நடக்கும்போது நான் எங்கு இருந்தேன் என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் நான் என் கடையில் இருந்தேன். வேறு யாரும் இல்லை. என்னை உத்தமன், தயாளன்,ஷீலாதேவி, சங்கீதா, சதிஷ் ஆகியோர்கள் அடித்தார்கள். அவர்களில் உத்தமன் என்னை தள்ளிவிட்டு காலால் மார்பில் உதைத்தார். சதிஷ் கல்லால் அடித்தார். நான் மயக்கம் அடைந்ததால் வேறு நபர்கள் எதால் அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

எனக்கு இரண்டு நாட்கள் கழித்து தான் நினைவு திரும்பியது. நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் 3 நாள் சிகிச்சை எடுத்து கொண்டேன். மருத்துவரிடம் எங்க எங்க அடிப்பட்டதாக சொன்னேன் என்றால் நான் மயக்கமாக இருந்ததால் சொல்லவில்லை. அருகில் சூணாம்பேடு, மதுராந்தகம், கடப்பாக்கம் ஆகிய இடங்களில் மருத்துவமனை

உள்ளது என்றால் சரிதான்.

போலிஸ் விசாரணையில் சதிஷ்என்னை கல்லால் அடித்ததால் இடது கண் புருவம் உடைந்துவிட்டதாக போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் எனக்கு தெரியவில்லை.

போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் இருந்து வந்தபிறகு எனது கடையில் வைத்து விசாரித்தார்கள். 1.5.2022ம் தேதி ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரியான தயாளன் ஆகியோர்கள் குடோனுக்கு வந்து கடையின் உள் லாக்கரை உடைத்து குடோனில் இருந்த சிமெண்ட் மூட்டை, கம்பிகள் மற்றும் உரத்தையும் எடுத்து வெளியே போட்டுவிட்டார்கள் என்ற சங்கதியை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

எனது கடையில் இருந்த எத்தனை ஆவணங்களை எதிரிகள் எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் ஒரு ஆவணம் தான். எதிரிகள் ஒரு ஆவணத்தை எடுத்து சென்றுவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் மயங்கிவிழுந்துவிட்ட பிறகு யார் கடைக்குள் சென்று ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகள் தான் எடுத்து சென்றார்கள். எதிரிகள் எடுத்து சென்றது யார் என்று எனக்கு தெரியாது.

நான் எதிரிகளின் இடத்தை கைப்பற்றி வைத்துக்கொணடு அதில் அத்துமீறி நுழைவதற்காக அவர்களுக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு எதிராக புகார் கொடுத்து அந்த வழக்கு இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது

என்றால் சரிதான்.

2வது நாள் பிரச்சனையின் போது போலிஸ் சம்பவ இடம் வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10 நாள் கழித்து தான் கடையின் சாவி போலிசாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியும். 10 நாள் கழித்து ADSP பார்த்து கடையின் சாவியை வாங்கினேன். தாவா சொத்தில் நான் கடை கட்டி வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கடை கட்டி வைத்துள்ள இடத்தில் தான் எதிரிகள் வேலிபோட்டார்கள் என்றால் சரிதான்.

நான் தாவா சொத்தில் கடையே கட்டவில்லை என்றால் அது உத்தமனின் சொத்து என்றாலும் சரியல்ல. எனக்கு எதிராக எதிரிகள் கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக நான் நடக்காத சம்பவத்தை குறித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் என்னுடைய உரமூட்டைகளை அப்புறப்படுத்திவிட்டு சில மூட்டைகளை தூக்கி சென்றுவிட்டார்கள். இப்படி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Valliamma
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur (FAC)